## கொடைக்கானல் நகராட்சி

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III-ன் பிரிவு 2-ன் கீழ் 19.09.2023ஆம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 18.09.2023

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் நகராட்சி 1899ல் தோற்றுவிக்கப்பட்டு, 16.04.1991ஆம் தேதிய அரசாணை எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்படி 16.04.1991 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியில், நகரின் எல்லையில் இருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் தலைமை நீரேற்று நிலையமும், நகரில் எட்டு இடங்களில் தரை மட்டத் தண்ணீர் தொட்டிகளும் உள்ளன. மேலும், நகரின் மையத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் நகராட்சி உரக்கிடங்கு அமைந்துள்ளது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 25 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலையும், 126.23 கிலோ மீட்டர் நகராட்சி சாலையும் உள்ளன. இந்நகராட்சி எல்லைக்குள் 13 தனித்தனியான குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளன. இந்நகராட்சி பகுதியின் நில அமைப்பானது மலைகள், பள்ளத்தாக்குகளையும், மேடு பள்ளங்களையும் உள்ளடக்கியதாகும். தற்போது கொடைக்கானல் நகராட்சியில் மொத்தம் நான்கு ஈப்புகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. கொடைக்கானல் மலைப் பிரதேசமாக இருப்பதால் இந்நகராட்சி பகுதியில் குடியிருப்புப் பகுதிகள் ஒரே சீராகவோ அல்லது தொடர்ச்சியாகவோ இல்லாமல், ஆங்காங்கே ஏற்றம் இறக்கமாக அமைந்துள்ளன.

கொடைக்கானல் நகர் பகுதியில் இருந்து நகராட்சியின் குப்பை கிடங்கு 14 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தினசரி நகர் பகுதியில் தினசரி தூய்மை பணியினை கண்காணித்திடவும், சுவஜ் பாரத் மிஷன் மற்றும் அரசின் திட்ட பணிகளை செயல்படுத்திடவும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்திடவும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினை தடுத்திட ஆய்வு பணி மேற்கொள்ளவும், பொது சுகாதார பிரிவிற்கு புதிய ஈப்பு அத்தியாவசிய தேவையாக உள்ளது.

<u>இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு ஈப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.</u>

| வ. எண் | தற்போதுள்ள வாகனத்தின் விபரம் | தற்போதுள்ள வாகனங்களின் பயன்பாடு | வாகனத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | TN 57 CY 5253 | நகர்மன்றத் தலைவர் | பயன்பாட்டில் உள்ளது |
| 2 | TN 57 CY 4858 | நகராட்சி பொறியாளர் | பயன்பாட்டில் உள்ளது |
| 3 | TN 57 BU 9623 | ஆணையாளர் | பயன்பாட்டில் உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 4 | TN 57 AS 0817 | நகரமைப்பு அலுவலர் | பயன்பாட்டில் உள்ளது |
| 5 | TN 57 AY 5392 | நகர்நல அலுவலர் | 2011ம் ஆண்டு வாங்கப்பட்டு தற்போது 12 ஆண்டுகள் கடந்த நிலையில் பழுதடைந்துள்ளது. |

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.1723/2022/பி3, நாள்.13.09.2023ன்படி, கொடைக்கானல் நகராட்சிக்கு மொத்தம் 5 வாகனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதில் தற்போது 4 வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது.

பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 AY 5392 வாகனமானது கடந்த 2011ல் வாங்கப்பட்டு 12 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் வாகனம் பழுதடைந்து தொடர்ந்து பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ளது. நகரில் அடிக்கடி மழை பெய்து வருவதினால் நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் தொய்வு ஏற்படுகிறது. கொடைக்கானல் நகரம் மலைப்பிரதேசம் என்பதினால் தொடர்ந்து பழுது நீக்கம் செய்து பயன்படுத்துவது மலைப்பாதையில் ஆபத்தானதாக உள்ளது.

எனவே, இந்நகராட்சியின் நிதி நிலைமை தற்போது திருப்திகரமாக உள்ளதாலும், நகர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறன்பட செய்திட வேண்டியுள்ளதாலும், மழைக்காலங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே பழுதடைந்துள்ள TN 57 AY 5392 வாகனத்தினை கழிவு செய்திடவும், இதற்கு பதிலாக கூடுதல் உந்து திறன் கொண்ட (Mahindra Scorpio) டீசல் ஈப்பு ஒன்று நகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **552, நாள். 19.09.2023** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.